[24th February 1969

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: இந்தியன் லாப் சென்டர் என்ற இடத்தில் அப்படிப்பட்ட படங்கள், பாட்ஜ்கள் விற்பனை செய்யப்பட்டன. அவை என்னென்ன என்று இங்கே சொல்வதற்குக் கூச்சமாக இருக்கிறது. 22 படங்கள் இருக்கின்றன. 514 படங்கள் கைப்பற்றப்பட்டு அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பார்க்க விரும்பினால் தனியாக வந்து அவற்றைப் பார்த்துக் கொள்ளலாம்.

திரு வி. தங்கபாண்டியன்: இந்த ஆபாசப் படங்களை விற்பதன் மூலம் லாபம் சம்பாதிக்கும் சிலர் அதைப் போன்றே ஆபாச நடனங்கள் நடத்தி அவற்றின் மூலம் லாபம் சம்பாதிக்கும் முறை தமிழகத்தில் பரவியிருக்கிறது. அது பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: குறிப்பாக அவற்றைக் குறித்து கவனத்திற்கு கொண்டுவந்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு எம். எத்திராஜுலு: சில ஸ்டுடியோக்களிலும் பிற இடங்களிலும் கூட விருந்துகள் நடந்தால் அங்கெல்லாம் இந்தப் படங்கள் காட்டப்பட்டன என்று சொல்லப்படுகிறது. அப்படி காட்டப்படுவதை இந்த அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ததா?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: எங்காவது அதைக் கண்டுபிடித்திருந்தால் அதுபற்றி உறுப்பினர் அறிவித்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

Sales Tax.

*28 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the All Dealers Association, T. Nagar, Madras at its meeting on 22nd January 1968 passed a resolution, condemning the levy of sales tax this year four times higher than that of last year effected by the Sales-tax officers and have sent the resolution to the Government; and

(b) if so, the action taken thereon by the Government?

விற்பனை வரி

திரு என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை தியாகராய நகர் சர்வ வியாபாரிகள் சங்கம் 1968 ஜனவரி 22-ம் தேதி கூடி விற்பனை வரி அதிகாரிகள் சென்ற காலங்களைக் காட்டிலும் நாலு பங்கு அதிக வரி விதித்தார்கள் என்று கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி தமிழக அரசுக்கு அனுப்பியுள்ளனரா?

(இ) ஆமெனில், அதன் மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) வருவாய்த்துறை வாரியம், தீர்வை விதிக்கும் அதிகாரி, பண்டிகை மாதங்களில் கடைகளைப் பார்வையிடச் சென்று, வணிகர்களால் கொடுக்கப்பெற்ற கணக்குகள் நம்பத்தகாதவை என்று மெய்ப்பிக்கத் தேவையானவற்றைக் கண்டுபிடித்திருந்தாலன்றி, 1967-68-ம் ஆண்டின் பண்டிகை மாதங்களுக்காக வரி விதிப்பு அதிகாரிகள் வரி விதிப்பை மாற்றுவதற்காகத் தொடங்கி வைத்த நடவடிக்கையைக் கைவிட வேண்டுமென வருவாய்த் துறை (வணிக வரி) வாரியம் கட்டளை பிறப்பித்துள்ளது.

திரு என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் விற்பனை வரிக் கணக்கை அதிகமாக அரசாங்கத்திற்குக் காட்டவேண்டுமென்று அந்த உத்தியோகஸ்தர்கள் அதிகமாக வசூல் செய்திருக்கிறார்கள். எங்கள் ஊரிலேயே ஒருவர் ஐயாயிரம் மூலதனம் போட்டு ஒரே வாரம் வர்த்தகம் நடத்தினார். அதற்கு 78 ஆயிரம் ரூபாய் விற்பனை வரி ஒரு ஆண்டிக்கு கணக்கு போட்டு வசூல் செய்ய வருகிறார்கள். ஒரே வாரம்தான் வர்த்தகம் செய்தேன், ஒரு வருஷத்திற்கு கணக்கு போட்டிருக்கிறீர்களே என்று அவர் எவ்வளவோ சொல்லியும் முடியாது என்றுவிட்டார்கள். அவருடைய ஆஸ்தியே ஐயாயிரத்துக்குத்தான் இருக்கிறது. இந்த நிலைமை தமிழகம் முழுவதும் இரண்டு மூன்று மாதங்கள் அதிகமாக விற்பனை வரிக் கணக்கைக்காட்டி வசூல் செய்திருக்கிறார்கள். அதற்கு என்ன நடவடிக்கை இந்த அரசாங்கம் எடுத்தது? தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் பதிலிலேயே கூறினேன். நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் பொதுவாக தீபாவளி நேரத்தில் சில நாட்களில் வியாபாரம் செம்மையாக இருக்கிறது என்ற கணக்கை வைத்துக்கொண்டு அதற்கான சரியான தஸ்தாவேஜுகள் இல்லாமல் போட்டிருக்கிறார்கள். வரிக்குத் தேவையான ஆதாரங்கள், நம்பிக்கையான கணக்கு விவரங்கள் இல்லாமலிருந்ததால் பல இடங்களில் நடவடிக்கைகள் கைவிடப்பட வேண்டுமென்று வருவாய்த்துறை வாரியம் கட்டளை பிறப்பித்தது என்று சொன்னேன். எங்கோ தவறுகள் ஒன்றிரண்டு நடந்திருக்கலாம். ஆனால் அந்தத் தவறுகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதுதான் சரியானது. முறையிலேயே விற்பனை வரித்துறை வேண்டுமென்றே செய்கிறார்கள் என்று மிகைப்படுத்தி கூறும் புகார்கள் சரியானதல்ல.

Kandamanaickanur Zamin Forests

* 29 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware of the exodus of elephants from the Kandamanaickanur Zamin Forests of Periakulam taluk, Madurai district, to Kerala forests consequent on the denudation of the forests in the Zamin area; and

(*b*) if so, the action taken thereon?